

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி திருவெண்ணைநல்லூர் பேரூரில் அல்லாசாமி குளத்தை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விஸ்வநாதன், பேரூர் செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி மன்றத் தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல், துணைத் தலைவர் ஜோதி, வார்டு கவுன்சிலர் சலிமா தாஜுதீன் , செயல் அலுவலர் முரளி முன்னாள் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கு.சரவணகுமார், மாவட்ட பிரதிநிதி சுரேஷ் பாபு , இலக்கிய அணி விஜயபாபு , தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு , கிருஷ்ணராஜ், முன்னாள் மாணவர் அணி அன்பழகன் , இளைஞர் அணி நிர்மல் ராஜ், சுரேஷ், சதாம் உள்ளிட்ட நகர நிர்வாகிகள் சையத் நாசர், டி.கே.எஸ்.செந்தில்முருகன், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கு.பாபு, சக்திவேல், அறிவழகன், ஜோதி, பரமேஸ்வரி செல்வம், கமலா கலியபெருமாள், அரங்கராஜ், ரகு, டி.பாக்யராஜ், வார்டு செயலாளர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆலங்குடி சட்டமன்ற தொகுதி, திருவரங்குளம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திருவரங்குளத்தில் நடைபெற்ற எளியோர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் சட்டத்துறை அமைச்சர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ் ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். தலைமைக் கழகப் பேச்சாளர்கள் பொன்னேரி சிவா, ராஜேஸ்வரி, ஸ்ரீலேகா, மாவட்ட துணை செயலாளர் ஞான.இளங்கோவன், ஒன்றியச் செயலாளர்கள் ஒன்றியச் செயலாளர்கள் அரு.வடிவேல், .கே.பி.கே.டி.தங்கமணி, சுப.செல்வம் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று முன்தினம் (26.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக ஜமுனாமரத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய மருத்துவ கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், குழும இயக்குநர், தேசிய நலவாழ்வு குழுமம் திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார சீரமைப்பு திட்டம் மரு. அருண்தம்புராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என்.அண்ணாதுரை (திருவண்ணாமலை), எம்.எஸ்.தரணிவேந்தன் (ஆரணி), சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசப்பாக்கம்), ஒ.ஜோதி (செய்யாறு), உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில்

# புதிதாக கட்டப்பட்ட 19 மருத்துவக் கட்டிடங்கள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு - மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தனர்!

திருக்கோவிலூர், டிச.28-

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டிடங்கள் என 19 புதிய கட்டிடங்கள் திறப்பு விழா நேற்று முன்தினம் 26.12.2024 வியாழக்கிழமை அன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் சுகாதாரம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் ஆகியோர் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் க.கார்த்திகேயன், தா.உதயசூரியன், ஆ.ஜெ.மணிகண்ணன் ஆகியோர் முன்னிலையில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி, திருக்கோவிலூர் வட்டத்திற்கு உட்பட்ட ஜி.அரியூர் ஊராட்சியில் இருந்து,

கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட ரிஷிவந்தியம், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளில் பல்வேறு இடங்களில் ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள், துணை ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூடுதல் கட்டிடங்கள் என, 19 புதிய கட்டிடங்களை அமைச்சர்கள் எ.வ. வேலு, மா.சுப்பிரமணியன் ஆகியோர் ரிப்பன் வெட்டி, குத்து விளக்கு ஏற்றி வைத்து திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தனர்.

மேலும் இவ்விழாவில் அமைச்சர் மா.சுப்பிர மணியன் பேசுகையில் தமிழ்நாட்டில் கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாக செயல்படும் மருத்துவமனைகளுக்கு மத்திய அரசு விருது வழங்கி வருகிறது.

இதில் கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் 69 விருதுகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த மூன்று ஆண்டுகால திராவிட மாடல் நல்லாட்சியில் 742 விருதுகள் பெறப்பட்டுள்ளது.

ஆக அ.தி.மு.க.வை காட்டிலும் திமுக 10 மடங்கு விருதுகள் அதிகம் பெற்றுள்ளது,இதில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மட்டும் 12 விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளது என்று குறிப்பிட்டு பேசினார்.

இதனைத் தொடர்ந்து பேசிய அமைச்சர் எ.வ. வேலு, இனிவரும் காலங்களில் பேருந்தில் செல்லும் பயணிகளுக்கு விபத்து நேரிட்டால் அவர்களுக்கு உடனடியாக முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கான திட்டம் நாளை அறிமுகம் செய்யப்பட உள்ளது. முதல்கட்டமாக நாளை அரசு பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்தனுகளுக்கு அதற்கான பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, அப்போதெல்லாம் மக்கள் நல்வாழ்வுத்துறை மறுமலர்ச்சி அடைகிறது.

மலைவாழ் மக்கள் நலன் கருதி, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில் வியாழக்கிழமை தொடங்கி வைக்கப்பட்டுள்ள இருசக்கர வாகன ஆம்புலன்ஸ் சேவைத் திட்டத்தை, அருமை நண்பர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மிக விரைவில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள கல்வராயன் மலையிலும் தொடங்க வேண்டும் என்று அவர் பேசினார்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், மக்களவை உறுப்பினர்கள் தே.மலையரசன், துரை.ரவிக்குமார், மருத்துவ மருந்து துறை இயக்குனர் மரு.தி.சி. செல்வ விநாயகம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், சுகாதாரத்துறை அலுவலர்கள், அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர்

# உதயநிதிஸ்டாலின் பிறந்தநாள் - வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டம் முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள் - 2வது பட்டியல்!



## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

| நாள் | பேச்சாளர்கள் | அமைப்பு |
|---|---|---|
| 28.12.2024 | 1.பவானி கண்ணன்<br>தலைமை கழக பேச்சாளர் | கணியம்பாடி தெற்கு ஒன்றியம் |
| 29.12.2024 | 1.R.S.பாரதி<br>கழக அமைப்பு செயலாளர் | குடியாத்தம் நகரம் |
| | 2. பொன்னேரி சிவா<br>தலைமை கழக பேச்சாளர் | பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் |
| | 3. பசும்பொன் ரவிச்சந்திரன்<br>தலைமை கழக பேச்சாளர் | பள்ளிகொண்டா பேரூர் |
| 30.12.2024 | 1.சேலம் சுஜாதா<br>தலைமை கழக பேச்சாளர் | அல்லாபுரம் பகுதி |
| | 2. பொன்னேரி சிவா<br>தலைமை கழக பேச்சாளர் | அணைக்கட்டு மத்திய ஒன்றியம் |
| | 3.நாகை நாகராஜன்<br>தலைமை கழக பேச்சாளர் | அணைக்கட்டு கிழக்கு ஒன்றியம் |
| | 4.ஈரோடு இறைவன்<br>தலைமை கழக பேச்சாளர் | கீ.வ.குப்பம் கிழக்கு ஒன்றியம் |
| 31.12.2024 | 1.சேலம் கோவிந்தன்<br>தலைமை கழக பேச்சாளர் | சேண்பாக்கம் பகுதி |
| | 2.எழும்பூர் கோபி<br>தலைமை கழக பேச்சாளர் | திருவலம் பேரூர் |
| | 3.முரசொலி மூர்த்தி<br>தலைமை கழக பேச்சாளர் | காந்திநகர் பகுதி |

நடைபெற உள்ள பொதுக்கூட்டங்களில் மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்டத்திற்கு உட்பட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு மற்றும் ஊர்கிளை நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே அட்டவணைப்படி அறிவிக்கப்படும் தேதிகளில் அந்தந்த அமைப்பிற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் ஏற்பாடுகளை செய்து கூட்டம் சிறப்பாக நடைபெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.

### கே.கே.செல்லப் பாண்டியன் தலைமை! கே.எஸ்.சந்திரன் முன்னிலை!

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் மாபெரும் கைப்பந்து போட்டி!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் பரிசு வழங்குகிறார்கள்! பெரியண்ணன் அரசு - கவிச்சுடர் கவிதைப்பித்தன் - எம்.எம்.அப்துல்லா டாக்டர் வை.முத்துராஜா- டாக்டர் அஞ்சுகம் பூபதி - த.சந்திரசேகர் பங்கேற்பு!

புதுக்கோட்டை,டிச .28-

கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவர் அணி திமுக சார்பில் நடத்தப்படும் மாநில அளவிலான ஆண்களுக்கான மாபெரும் கைப்பந்து போட்டி இன்று (28.12.2024-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் வயலோகத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் நடைபெறுகிறது.

மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர், விராலிமலை தொகுதி பார்வையாளர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, அன்னவாசல் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் கே.எஸ்.சந்திரன், பெ.தெய்வானை, சபா(எ) ரத்தினசபாபதி, கோ.அண்ணாத்துரை செ.பிரசன்னா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு

பரிசுகளை வழங்குகின்றனர். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ.ச. இளையசூரியன் வரவேற்புரை யாற்றுகிறார். வெற்றி பெறும் வீரர்களுக்கு முதல் பரிசு ரூ.40048 ஐ புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்,

இரண்டாம் பரிசு ரூ.30048 ஐ கழக விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மூன்றாம் பரிசு ரூ.20048 ஐ பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம். பழனியப்பன், நான்காம் பரிசு ரூ.10048 ஐ அகரப்பட்டி எஸ்.லெட்சுமணன் ஆகியோர் வழங்குகின்றனர்.

அனைத்து பரிசுகளுக்கான கோப்பையை எஸ்.எஸ்.பி கிரஷர் அண்ட் ரெடிமிக்ஸ் உரிமையாளர் எஸ்.எஸ்.பி.ராஜா வழங்குகிறார்.

இந்நிகழ்வுகளில் எம்.எம். அப்துல்லா எம்.பி, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைபித்தன், த.சந்திரசேகர், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், வி. என்.மணி, பி.டி.அரசகுமார், செ. அசோக்பாண்டியன், கே.ஆர்.என்.போஸ், அரு. வீரமணி, எம்.லியாகத் அலி, எஸ்.எஸ்.கருப்பையா க.மதியழகன் பெ.ராஜேஸ்வரி, சுப.சரவணன் கீரை.தமிழ் ராஜா சு.சண்முகம், என். சேட், மு.பி.ம.சத்தியசீலன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், சி.சண்முகம் வெ.முத்துக்ருஷ்ணன், தவ.பாஞ்சாலன், மு.க.ராமகிருஷ்ணன், எம்.பரமசிவம், மா.தமிழ் அய்யா, ஆர்.ஆர். சாமிநாதன்,

ஒ.எஸ்.வெங்கடாசலம், வை.விஜயகுமார், பி.அண்ணாதுரை, உ.முருகேசன், எம்.செந்தில்குமார், எம்.எம்.பாலு, என்.சாத்தையா, இராசு.சந்தோஷ், ஆர்.செல்லத்துரை, சி.ஆர். வி.சித்ரா, டாக்டர் மு.க.முத்துக் கருப்பன், டாக்டர் செ.குறிஞ்சிவாணன், சி.அரங்க நாயகம், கா. இளவரசன், ஆர். உஷா ராணி, அ.பிரபா, ஏ.சுந்தர்ராஜ், இ.பி.சண்முகம், மு. கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன் முத்துச்சாமி, கை. பழனிச்சாமி, கே.அன்சாரி பாஷித், விளாப்பட்டி சிவா, எஸ்.வி.ஆர். ஸ்டாலின் ராஜா, பொன். பாரி, வழக்கறிஞர் எம்.பாலமுருகன், எம்.வி.முத்தையா, எஸ்.நிஜாமுதீன், சி.மணி ஆர்.ஜே.அண்ணாதுரை, கே.சிவசுப்பிராணியன், கே.டி.ஆர்.தங்கராஜ், சாங்கிராப்பட்டி ஆர்.ரவி, எஸ்.தமிழினியன், சி.சின்னத்துரை, எஸ்.ராஜேந்திரன், இரா.முத்துச்செல்வம், சித.சண்முகம், எம்.கோவிந்தராஜ், வி.சி. பரஞ்ஜோதி,

ஆர்.கோபாலன், எஸ். முருகையன், எம்.முத்துச்சாமி பழ.பாண்டியன், முத்துலெட்சுமி, ராஜேந்திரன், பி.கார்த்திக், திருப்பதி, பி. ராஜேஸ், எம்.ஆர்.சி.சிதம்பரம், சி.சண்முகம், டி.கணேசன், கே. கார்த்தி, பி.கிட்டு மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். முடிவில் அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் முகமது ரிஷா, மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் சிப்காட் பி.சதீஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தர்மபுரி மாவட்டத்தின் கழக மூத்த முன்னோடி,முன்னாள் மாநில தொண்டரணி, ஒருங்கிணைத்த சென்னை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித்துறை இணை இயக்குனர்,மத்தூர் கலைமகள் கலாலயா பள்ளி தாளாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்த சிந்தை. முனைவர்.மு.ராஜேந்திரன், டிச. 25 அன்று தருமபுரியில் உள்ள அவரது இல்லத்தில் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார். சிந்தல்பாடி இல்லத்திற்கு கொண்டுவரப்பட்ட அவரது உடலுக்கு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய,பேரூர் கழகத்தினர், விசிக, திராவிடர் கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது இழப்புக்கு இரங்கல் கூட்டம் நடைபெற்றது.